பக்கங்கள் 20+ 03

# மாலை முரசு

## யாழ். மாவட்டத்தின் நிரந்தர அரச அதிபராக பிரதீபன் நியமனம்



யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிரந்தர அரச அதிபராக மருதலிங் 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 06 வெள்ளிக்கிழமை 20.06.2024 | அதிர்வு 321

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## செம்மணி மனிதப் புதைகுழிக்கு

# நீதி கோரி மாபெரும் போராட்டம்




(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த மனிதப் புதைகுழி தொடர்பான பரீட்சாத்த அகழ்வுப் பணிகளில் மொத்தமாக 19 முழுமையான மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. 02▶



























## நீதி கோரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவை தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வந்த நிலையிலேயே வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இன்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் – நல்லூர் வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு நீதி கோரிக் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கடமைகளுக்கு எனப் பொலிஸார் அதிகளவில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் பிரதீபன் அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் இன்று வெள்ளிக்கிழமை அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோவினால் அமைச்சரவை அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

மருதலிங்கம் பிரதீபன் கடந்த 2024 மார்ச் 9 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதில் அரச அதிபராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஊர்காவற்றுறை பிரதேச சபை 'சைக்கிள்' வசம்

## தவிசாளராக அன்னலிங்கம் அன்னராசா தெரிவு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா திருவுளச்சீட்டு முறை மூலம் தெரிவாகியுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு இன்று காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவனந்தினி பாபு தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

13 ஆசனங்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 4 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா 3 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 2 ஆசனங்களையும் , ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஜெகதீஸ்வரன் யுகந்தனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அன்னலிங்கம் அன்னராசாவும் முன்மொழியப்பட்டனர்.







பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜெகதீஸ்வரன் யுகந்தனுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 வாக்குகளும் கிடைக்க மொத்தமாக 5 வாக்குகளைப் பெற்றார்.

மேலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அன்னலிங்கம் அன்னராசாக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு வாக்கும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 3 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒரு வாக்குகளும் கிடைக்க மொத்தமாக 5 வாக்குகளைப் பெற்றார். தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும் நடுநிலைமை வகித்தனர்.

தவிசாளர் தெரிவில் போட்டியிட்ட இருவருக்கும் சமமான வாக்குகள் கிடைக்கப் பெற்ற நிலையில் திருவுளச் சீட்டு முறை மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா தவிசாளராகத் தெரிவானார். உப தவிசாளராக செபஸ்தியான் பிள்ளை லெனின் ரஞ்சித் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தவிசாளராகப் போட்டியிட்ட ஜெகதீஸ்வரன் யுகந்தனை தமிழரசுக் கட்சின் மற்றைய உறுப்பினர் தவிசாளராக முன் மொழிய மறுத்த நிலையில் ஈ.பி.டி.பியின் உறுப்பினரே முன்மொழிந்து வழிமொழிந்தமை குறிப்பிடத்தக்கது.





# வேலணை பிரதேச சபை தமிழரசிடம்

## தவிசாளராக சிவலிங்கம் அசோக்குமார் ஏகமனதாகத் தெரிவு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ். வேலணை பிரதேச சபையின் தவி சாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிவலிங்கம் அசோக்குமார் ஏகமனதாகத் தெரிவானார்.

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வேலணை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

22 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 3 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேச்சைக் குழு – 1, சுயேச்சைக் குழு – 2, சுயேச்சைக் குழு – 3 என்பன தலா ஓர்ஆசனத்தையும்கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சிவலிங்கம் அசோக்குமார் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டார்.

இதன்போது சுயேச்சைக் குழு உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

சபையில் தவிசாளருக்கு வேறு எந்தத்தெரிவுகளும்முன்மொழியப்படாத நிலையில் சிவலிங்கம் அசோக்குமார் தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வசந்தகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.









# வலி. தென்மேற்கு பிரதேச சபையும் தமிழரசு வசம்

## தவிசாளராகக் கந்தையா யெசீதன் தெரிவு

(பிரபாகரன் டிலக்சன்,
எஸ்.நிதர்ஷன்)

யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கந்தையா யெசீதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.



28 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 5 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலா 2 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக கந்தையா யெசீதன் முன்மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் நாகராசா பகீரதன் முன்மொழியப்பட்டார்.

தவிசாளர் தெரிவுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கந்தையா யெசீதன் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.டி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் 13 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட நாகராசா பகீரதன் 9 வாக்குகளையும் பெற்றனர். 6 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இதன் மூலம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கந்தையா யெசீதன் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பேரின்பநாயகம் சுபாகர் தெரிவானார்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருந்து வழங்கலுக்கு சிகிச்சை

நாட்டின் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான மருத்துவ, சுகாதாரத் துறையில் மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்து அரசுத் தரப்பில் மறுப்புகள் கூறப்பட்டு வந்தன. மருத்துவத் தொழிற்சங்க தரப்புகள் மருந்துகளுக்கு பற்றாக்குறைகள், தட்டுப்பாடுகள் நிலவுகின்றன் என்று கூற அரசு தரப்பு அதனை மறுத்து வந்தது.

இப்போது நிலைமை கழுத்தை இறுக்கும் நிலையில், சாவகாசமாக நிலைமையை ஒப்புக் கொள்ளும் அரசு, இந்த நிலைமைக்குக் கூறும் காரணங்களை ஒட்டி எழும் விடயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

தற்போதைய கணக்கின்படி இலங்கையர்கள் இயல்பை விட அதிகமான மருந்துகளை உட்கொள்கின்றமையும் இந்த தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம் என்ற தொனியில் பிரதி சுகாதார அமைச்சர் டாக்டர் ஹன்சகா விஜேமுனி விளக்கம் அளித்திருக்கிறார்.

''நாங்கள் வியக்கத்தக்க வகையில் அதிக அளவிலான மருந்துகளை நுகர்கின்ற ஒரு நாடு. நாங்கள் பொதுவான 863 வகைகளின் கீழ் மருந்துகளை வாங்கி நோயாளர்களுக்கு வழங்கி வைக்கின்றோம். இதைத் தவிர, பல்வேறு மருத்துவ நிபுணர் குழுக்கள் மேலும் 83 பொதுவான மருந்துகளைக் கோரியுள்ளன. இங்கிலாந்து போன்ற நாடுகளில் கூட இத்தனை வகையான மருந்துகள் இல்லை. குறைந்த எண்ணிக்கையிலான மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன.'' - என்று அவர் விளக்கம் அளித்திருக்கிறார்.

சிகிச்சை முறைகளில் உரிய வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் தற்போதைய மருந்து வகைகளின் எண்ணிக்கையை 450 முதல் 500 வரை ஆகக் குறைக்க முடியும் என்று அவர் கூறுகிறார்.

நோயாளிகளுக்கு மருந்துகளைப் பரிந்துரைப்பதில் மருத்துவ வல்லுநர்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை உருவாக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது என்று அவர் கூறியிருக்கின்றார்.

இதன்மூலம் ஆண்டுதோறும் மருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கப்படும் 18 ஆயிரத்து 500 கோடி ரூபாவை குறைக்க முடியும் என்பது அவர் கருத்து.

நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்படும் மருந்துகளின் அளவுகள் கூட மருத்துவரைப் பொறுத்து மாறுபடுவதை காண்கிறோம் என்று கூறும் அவர், அதில் ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்துவதன் மூலம் வீண்விரயத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் சுட்டிக் காட்டுகிறார்.

ஒருபுறம் மருத்துவ சேவை - அதிலும் அதற்கான மருந்துகள் - அத்தியாவசியமானவை. மறுபுறம் அவை அதிக விலையில் கொள்முதல் செய்யப்படுபவை. ஆகையினால் வீண் விரயமும் அநாவசிய செலவும் தவிர்க்கப்பட வேண்டியமை முக்கியம்தான்.

அரச செலவிலான மருந்துகள் என்பதற்காக வாங்கிக் கொட்டி வீணாக்க முடியாது. அதேவேளை தேவையற்ற மருந்துகளை அதிக அளவில் உள்ளெடுத்து நோயாளர்களும் தங்கள் உடல் நிலையைக் கெடுத்துக் கொள்ளவும் கூடாது.

இவற்றுக்கு நடுவில் ஒரு சீர்த்தன்மையை இத்துறையில் பேணுவது கட்டாயமானதும் முக்கியமானதும் ஆகும். அது பற்றி மருத்துவத் துறை சார் நிபுணர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டியது காலத்தின் கட்டாயமாக எழுந்துள்ளது.





# பாடசாலைகளில் உலக உணவு திட்டம் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்தில் உலக உணவு திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பாடசாலை உணவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது.

கிராமிய சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலர் சம்பத் மந்திரிநாயக்க, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்த கோபாலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெய ராணி பரமோதயன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஆ.சிறி, பிரதிப் பிரதம செயலாளர் அலு வலகம் – திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவச்சந்திரன், பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி கே.நிறஞ்சலா, தேசிய உலக உணவு நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் முஸ்தபா நிஹமத் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

2023 ஆம் ஆண்டில் இருந்து வடக்கில்நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் திட்டத்தை எவ்வாறு மேம்படுத் தலாம் என்பது தொடர்பிலும் திட்டத்தின் நடைமுறையாக்கலிலுள்ள சவால்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.





# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு அமுதவிழா!

## நிகழ்வுகளை இரண்டு நாள்கள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமுதவிழா நிகழ்வுகள் இரண்டு நாள்கள் நடை பெறவுள்ளன.

நாளை (21) சனிக்கிழமையும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை சாரங்கா இசை மன்ற இயக்குநரும் ஓய்வுநிலை ஆசிரியருமான திருமதி வாசஸ்பதி ரஜீபன் தலைமையில் சங்கிலியன் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி சரஸ்வதி



சுகிர்தராஜ், யாழ். பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவ லகத்தைச் சேர்ந்த திருமதி தயாபரன் மலர்மகள் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

விசேட நிகழ்வாகக் கலாநிதி க. சிதம்பரநாதனின் அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் பறையும் பாடலும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து மன்றத்தில் நடைபெறும் வகுப்புகளில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாண வர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதனையடுத்து மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

தொடர்ந்து மன்றத்தில் அறநெறி வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக் கிழமை நிகழ்வுகள் சங்கிலியன் மன்றத் தலைவர் டாக்டர் வி.ஜனகன் தலைமை யில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தொழில திபர் ஈ.எஸ். பேரம்பலம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ரி. ஜெயசீலன், தொழிலதிபர் கணேசராஜா செந்தூ ரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விசேட நிகழ்வாக விருந்தினர்கள் பாரம்பரியக் கலையான சிலம்பாட்டத்துடன் சங்கிலி யன் மன்னனின் தோரணை வாயிலில் இருந்து விழா மேடைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.



## வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில்

# இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்ட முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வு!

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (20) நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்த முறை அதிக திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை முழுமையாகச் செலவு செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான மீளாய்வு இடம்பெற்றது. தொடர்ந்து கல்வித் திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. இதன்போதுள்ள சவால்கள் தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அதற்குரிய தீர்வுகளும் வழங்கப்பட்டன.



வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவிலுள்ள கட்டடங்களை ஆய்வு செய்து அவற்றில் தேவையானவற்றை நிறைவுறுத்துவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

ஆசிரிய வளப்பங்கீடு தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்களே பதிலளிக்க வேண்டியவர்கள் எனக் குறிப்பிட்ட ஆளுநர், பின்தங்கிய பிரதேசங்களில் எந்தவொரு பாடத்துக்கும் ஆசிரியர் இல்லாத நிலைமை இருக்கக் கூடாது எனவும் அதை உறுதிப்படுத்த வேண்டியது வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்பு என்றும் சுட்டிக்காட்டினார்.

வடக்கிலுள்ள தேசியப் பாடசாலைகள் சிலவற்றால் எழுந்துள்ள சவால்கள் தொடர்பிலும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது. மேலும், தவணைப் பரீட்சைகளுக்கு பாடசாலை மாணவர்களிடம் நிதியை அறவிடாமல் மாகாண நிதியை வழங்குவது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து ஒழுக்காற்று விசாரணைகளையும் எவ்வளவு விரைவாக நடத்தி முடிக்க முடியுமோ அதைச் செய்து முடிக்குமாறும், எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணைகளை எவ்வளவு குறுகிய காலத்தில் செய்து முடிக்க முடியுமோ அதற்கு உரிய ஒழுங்குகளையும் விரைந்து தயாரிக்குமாறும் ஆளுநர் பணித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம், நிதி, திட்டமிடல், கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.







# சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் தொடர்பில் இழுபறி!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

**(பாறுக் ஷிஹான்)**

சமூக சேவை உத்தியோகத்தர் நியமனம் நீண்ட காலமாக இடம்பெறவில்லை எனத் தெரிவித்து சமூக சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கம் நேற்று (19) மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொண்டிருந்தது.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸை சந்தித்து சமூக சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஜீ.அர்ஸாத், தொழிற்சங்க உயர்பீட உறுப்பினர் ஏ.அஹமட் சபீர் ஆகியோர் முறைப்பாடு வழங்கினர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் பொது செயலாளர் ஏ.ஜீ.அர்ஸாத்,

சமூக சேவை உத்தியோகத்தர் சேவை என்பது சமூகத்தில் நலிவடைந்த மக்களின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் அத்தியாவசிய பணிகளை ஆற்றிவரும் மிகமுக்கியமான சேவையாகும். ஆனாலும் இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறாமையால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 44 பிரதேச செயலகங்களில் 21 பிரதேச செயலகங்களில் வெற்றிடம் ஏற்பட்டு எமது பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பல முறைப்பாடுகளை எமது தொழிற்சங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியும் கூட அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையை அடுத்து குறித்த தொழிற்சங்கம் கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் மாகாண பொது சேவை ஆணைகுழுவால் கோரப்பட்டும் அது தொடர்பில் துரிதமாக நடவடிக்கை எடுக்காமையாலும் அதையடுத்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும் அரச சேவையில் பணியாளர்களை உள்வாங்குவது தொடர்பான மட்டுபாடுகளால் அப்போது கைவிடப்பட்டிருந்தது.

எவ்வாறெனிலும் சமகாலத்தில் வடக்கு மாகாணத்தில் இதே பதவிக்காக வடமாகாண பொதுசேவை ஆணைக்குழு குறித்த ஆட்சேர்ப்பை செய்திருந்தது. அத்துடன் கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பாக மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் நாம் பல தடவை முறையிட்ட போதும் ஆட்சேர்ப்பு தொடர்பாக அரசின் புதிய கொள்கைப்படி திறைசேரி செயலாளரின் அனுமதி பெற வேண்டியிருப்பதால் சுகாதார, சமூக சேவை அமைச்சின் செயலாளர் அவற்றைப் பெற்று தரும் பட்சத்தில் குறித்த சேவைக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டி பரீட்சையை நடத்த முடியும்.-எனக் கூறினார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் முதலமைச்சின் செயலாளர் ஆகியோரிடமும் கிழக்கு மாகாண ஆளுநரிடமும் பல முறைப்பாடுகளை மேற்கொண்ட போதும் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாமையால் தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளோம். குறித்த ஆணைக்குழுவின் தீர்ப்பின் அடிப்படையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு இவ்வாண்டுக்குள் எமது சேவைக்காக புதிய உத்தியோகத்தர்கள் உள்வாங்க படுவர் என எதிர்பார்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘மனாரியன்ஸ் 95’ பூப்பந்தாட்ட சம்பியன் வெற்றிக் கிண்ண போட்டியும் பரிசளிப்பும்

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

மருதமுனை “மனாரியன்ஸ் 95” சமூக அமைப்பு ஏற்பாடு செய்து நடாத்திய பூப்பந்தாட்ட வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டி ஜூன் மாதம் 13, 14, 15 ஆம் திகதிகளில் மருதமுனை அல்-மனார் பூப்பந்தாட்ட உள்ளக மைதானத்தில் நடைபெற்றது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன



தொடர்ச்சி▼

# ‘மனாரியன்ஸ் 95’ பூப்பந்தாட்ட சம்பியன் வெற்றிக் கிண்ண போட்டியும் பரிசளிப்பும்

தொடர்ச்சி▲

அமைப்பின் தலைவர் இஸட்.எம். றினாஸ் தலைமையில் இரவு விமர்சையாக நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர் கலந்து கொண்டடார். கௌரவ அதிதியாக அல்-மனார் மத்திய கல்லூரியின் அதிபர் ஐ. உபைதுல்லா கலந்து கொண்டார்.

மருதமுனையின் வரலாற்றில் முதல் முறையாக நடைபெற்ற இந்த பூப்பந்தாட்ட வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டியில் மனாரியன்ஸ் 95 அமைப்பின் செயலாளர் இஸட்.எம் பௌஸான், சுற்றுப் போட்டிக்கான இணைப்பாளரும் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலக உத்தியோகத்தருமான எம்.ஏ. பரீஸ் உட்பட மனாரியன்ஸ் 95 சமூக அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், அனுசரணையாளர்கள், பிரதேசத்தின் பூம்பாத்தாட்ட ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட வீரர்கள், இளம் வீரர்களுக்குத் தனிநபர் போட்டியாகவும் இரட்டை போட்டியாகவும் நடைபெற்ற இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பதக்கம் அணிவிக்கப் பட்டு, வெற்றி கிண்ணங்கள், சான்றிதழ்கள், பணம் பரிசு வழங்கிக் கௌரவிக கப்பட்டனர்

நிகழ்வுகளை சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.எம். றஜி மற்றும் யூ.எல். எம்.அசாம் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.






# “சுவர்ண நிருத்தியா” பொன்விழா நிகழ்வு!

நிர்த்தனா நடனப்பள்ளியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு “சுவர்ண நிருத்தியா” பொன்விழா கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரபல பரதநாட்டியக் கலைஞர் பாலசுந்தரி பிராத்தலிங்கம், கம்பவாரிதி இ.ஜெயராஜ், கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.செந்தில்நாதன் முதலான பல முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நடனப்பள்ளியின் இயக்குநரும் பரதநாட்டியக் கலைஞருமான சிவா னந்தி ஹரிதர்ஷன் தனது சிரேஷ்ட மாணவியரோடு இணைந்து நடனமாடினார்.









# கதிர்காமத்துக்கான கானகப் பாதை கிழக்கு ஆளுநரால் திறந்துவைப்பு!

**( உகந்தையிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டுக் கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை இன்று (20) வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் நந்தலால் ஜயசேகர பூக்கம்பம் வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

வரலாறு காணாத வகையில் இந்த முறை சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடியார்கள் முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்து சமய கலாசார முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலைப் பத்து பாடி பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் பஞ்சாரத்தி காட்டியதும் கானகப் பாதைக் கதவு திறந்து வைக்கப்பட்டது.

இன்று அதிகாலை 4 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடத்தி ஆசியுரை வழங்கினார். காலை 5.30 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன், கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் எஸ். பார்த்தீபன், லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், பொத்துவில் உதவி பிரதேச செயலாளர் கே.இராமக்குட்டி, முன்னாள் மாகாண கலாசார பணிப்பாளர் ச. நவநீதன்மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே.ஜெயராஜி, ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க, காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில், இந்து சமய செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா (ஜெயா வேல்சாமி) தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும். உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை, பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு, 12 மைல் தூரத்தில் நாவலடி, பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை, 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு, 8 மைல் தூரத்தில் கட்டகாமம், அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது.

சுமார் 6 நாள்கள் இந்தக் காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. இன்று திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை ஜுலை 04 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. யூலை மாதம் 11 ஆம் திகதி தீர்த்தம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

கதிர்காம பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம் என்று “ஷேத்திராடனம்” எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.







# தொடரும் அரசின் காணி அபகரிப்பால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்!

## யாழ். மாநகர முதல்வர் மதிவதனி இலங்கைக்கான பிரித்தானிய தூதருக்கு எடுத்துரைப்பு

வடக்கு மாகாணத்தில் அரசு காடுகள் என்ற வரையறைக்குள் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக காணிகளைக் கையகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் கௌரவ திருமதி மதிவதனி விவேகானந்தராசாவுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய தூதர் அண்ட்ரூ பெட்ரிக் ஆகியோருக்கும் இடையாலன உத்தியோகபூர்வ சந்திப்பு யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மாநகரத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக வாழ்த்துக்களை தூதர் முதல்வருக்குத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மாநகரத்தின் தற்போதைய நிலமைகள், முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேலைத் திட்டங்கள் மற்றும் மாநகரசபையின் தேவைகள் தொடர்பில் தூதருக்கு முதல்வர் தெளிவுபடுத்தினார்.

இதன்போதே இந்த விடயத்தையும் எடுத்துரைத்தார்.

அவர் மேலும் கலந்துரையாடும் போது,

வடக்கு மாகாணத்தில் அரசால் காடுகள் என்ற வரையறைக்குள் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடாக காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் வடக்கு மக்கள் பாதிக்கப்பகின்றனர் என்று சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் விசேட தெளிவுபடுத்தல்களையும் வழங்கினார். அது தொடர்பான ஆவணம் ஒன்றையும் தூதருக்கு முதல்வர் கையளித்தார்.

முதல்வர் குறிப்பிட்ட விடயங்களை கேட்டு அறிந்து கொண்ட பிரித்தானிய தூதர் இந்த விடயங்கள் தொடர்பில் மத்திய அரசினதும், துறைசார் தரப்பினரதும் கவனத்துக்குக் கொண்டு செல்வார் என்றும் இந்த ஆவணங்களை பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு மக்கள் நலன் சார்ந்த விடயங்களிலும் மற்றும் யாழ்ப்பாணம் மாநகரத்தின் முக்கிய மக்கள் நலன் சார்ந்த முன்னேற்றகரமான வேலைத் திட்டங்களிலும் தங்களது நாட்டினதும், தூதரகத்தினதும் ஒத்துழைப்புக்கள் வழமை போன்று இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து இணைந்து பயணிக்க தயாராக இருக்கிறார் என்றும் தூதர் குறிப்பிட்டார்.

இருவரும் சந்திப்பின் ஞாபகார்த்தமாக நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசில்களைப் பகிர்ந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் மாநகரசபை ஆணையாளரும் கலந்துகொண்டார்.












# கோபாலபுரத்தில் இடம்பெற்ற சர்வதேச யோகா தின நிகழ்வு!

(அபு அலா )

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஆயுள்வேத திணைக்களம் மற்றும் இந்திய தூதரகம் என்பன இணைந்து "ஒரு பூமி, ஒரு ஆரோக்கியத்துக்கான யோகா" எனும் தொனிப்பொருளில் யோகா தின பயிற்சி நிகழ்வுகளை நேற்று (19) நாடளாவிய ரீதியில் முன்னெடுத்தது.

அதற்கமைவாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபி லின் வழிகாட்டலின் கீழ், திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் என்.நிரஞ்சன் தலைமையில், கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் யோகா தின நிகழ்வு இடம்பெற்றது.

யோகா பயிற்சியை செய்வதன் மூலம் எனது உடலில் ஏற்படும் பல தொற்றா நோய்களுக்குச் சிறந்த தீர்வுகள் கிடைக்கின்றது.

இந்தப் பயிற்சியை தினமும் கடைப்பிடித்தால் எமது உடல் ஆரோக்கியத்தைப் பேணமுடியும். அத்துடன் தொற்றாநோயின் தாக்கத்தில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் என்.நிரஞ்சன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# குழந்தை ஜேசு முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வும் பரிசும்!





(எஸ். நிதர்ஷன்)

கரவெட்டி குழந்தை ஜேசு முன்பள்ளியின் 2025 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்ற இல்லம் மற்றும் மாணவருக்கான வெற்றிக் கேடயம் மற்றும் பரிசில்களை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி மகேந்திரன் வாசுதேவன் வழங்கினார்.

வெற்றிக் கேடயத்தை முன்பள்ளி அதிபர் வழங்கி வைத்தார்.




# மரக்கறி விற்பனைப் போர்வையில் போதைப்பொருள் வியாபாரம்!

## மடக்கிப் பிடிக்கப்பட்டார் சந்தேக நபர்

(பாறுக் ஷிஹான்)

மரக்கறி விற்பனை என்ற போர்வையில் போதைப் பொருள்களைச் சூட்சுமமாக விற்பனை செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபர் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியல் தற்காலிக மரக்கறி விற்பனை நிலையம் எனும் போர்வையில் சூட்சுமமாக போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசேட சோதனை நடவடிக்கை அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த மரக்கறி விற்பனையில் ஈடுபட்டவர் தன்னை கைது செய்ய பொலிஸார் முயற்சிப்பதை கண்டு அருகில் உள்ள வயல்வெளிக்குள் தப்பி ஓடியுள்ளார். எனினும் புலனாய்வு பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து கடும் சிரமத்துக்கு மத்தியில் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

அத்துடன் குறித்த மரக்கறி விற்பனை செய்யும் கடையில் இருந்து தடை செய்யப்பட்ட போதைப் பொருள்களையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.டபிள்யு.எஸ். நிசாந்த வெதகே தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# மன்னாரில் தியாகி நினைவேந்தலும் இரத்த தானம் வழங்கி வைப்பும்





(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.அல்.எப். அலுவலகத்தில், 35 ஆம் ஆண்டு தியாகிகள் தின நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாலை கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.விஜயராஜ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கட்சியின் உயர்பீட உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ், கட்சியின் நகர சபை உறுப்பினர் எஸ்.ரஜனி, முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், கலந்து கொண்டு தியாகிகளுக்கு மலர் தூவி மாலை அணிவித்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, தியாகிகள் தினத்தை முன்னிட்டுக் கட்சியின் உறுப்பினர்களால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கற்பிட்டி நுரைச்சோலையில் அரசின் வீட்டுத் திட்டப் பணி!



(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப் படும் "உங்களுக்கு ஒரு வீடு - நாட்டுக்கு ஒரு எதிர்காலம்" தேசிய வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ், கற்பிட்டி பிரதேச செயலர் பிரிவில் அமையவுள்ள இரண்டாவது வீட்டுக்கான அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை (18) நுரைச்சோலை கிராம சேவையாளர் பிரிவில் கற்பிட்டி பிரதேச செயலாளர் பீ.ஜீ.எஸ்.என் பிரியதர்ஷினி தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பல முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த வீடமைப்புத் திட்டம் நாடு முழுவதும் உள்ள குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட இரண்டு பயனாளிகளின் புதிய வீடுகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நடும் விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.






# வவுனியா மற்றும் மன்னாரில் பல்வேறு உதவிகளை வழங்கிய சந்நிதி ஆச்சிரமம்

வவுனியா –வடகாடு, பிரமணாலங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும், வவுனியா – பெரியதம்பனை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டன.


அத்துடன் வவுனியா – வடகாடு, பிரமணாலங்குளம் ஶ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரணப் பணிக்காக 25 ஆயிரம் ரூபா நிதி ஆலய தலைவரிடம் வழங்கப்பட்டது.

மன்னார்– இரணைஇலுப்பைக்குளம் சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நேரடியாக பார்வையிட்டு, 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபா நிதியில் பாடசாலைக்கான பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் சின்னவலயன்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முதல்வர் சி. சிவாகரன், அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி சுகுணா முகுந்தன், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் சுஜேந்திரன், கிராம அலுவலர் செல்வி நி.ஷோபனா (பெரியதம்பனை, 207ஏ),ஶ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகிகள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.








# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக அருளுரை!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, ஆன்மீக அருளுரையாக 'மகாபாரதம்' தொடர் சொற்பொழிவு ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார்

இன்று வெள்ளிக்கிழமை காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.




# "கார்ட்டூனிஸ்ட்" மூர்த்தி காலமானார்!

தினக்குரல் உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் நீண்ட காலமாக கருத்தோவியராக பணியாற்றிய அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி (கார்ட்டூனிஸ்ட் மூர்த்தி) உடல் நலக் குறைவால் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் புஞ்சி பொரளை லங்கா மலர் சாலையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படவுள்ளது.

1970 களில் கொழும்பில் இருந்து வெளியாகிய பிரபல தமிழ், நகைச்சுவை சஞ்சிகையாகிய 'சிரித்திரன்' சஞ்சிகையில் கருத்தோவியங்கள், நகைச்சுவை துணுக்குகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகளை வெளியிட்டதன் மூலம் இவர் தனது ஊடகப் பணியை ஆரம்பித்திருந்தார்.



அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய 'ஈழமுரசு', 'சமநிதி' மற்றும் சில பத்திரிகைகளுக்கும் ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்புகளைச் செய்திருந்தார்.

பின்னர் இவர் 1984 ஆம் ஆண்டில் இருந்து 1995 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் விவசாய வர்த்தக நிறுவனம் ஒன்றில் கணக்கு இலிகிதராக பின்னர் முகாமையாளராகப் பணியாற்றினார். 1996 ஆம் ஆண்டில் கொழும்புக்கு இடம்பெயர்ந்த இவர் 1996 ஆம் ஆண்டில் 'வீரகேசரி' பத்திரிகைக்கு ஆங்கில், சிங்கள மொழிபெயர்ப்புக் கட்டுரைகளை எழுதி வந்தார். பின்னர் 1997 ஆம் ஆண்டு ஏப்ரலில் 'தினக்குரல்' பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்து ஆசிரிய பீட கருத்தோவியராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் இறுதிவரை பணியாற்றினார்.

இவர் இதுவரையில் சுமார் 5 ஆயிரம் அரசியல் கேலிச் சித்திரங்கள் மற்றும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்புகளை 'தினக்குரல்' பத்திரிகையிலும் 'வீரகேசரி' பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளார். 1970களிலிருந்து இக்கட்டான காலகட்டங்களில் அரசியல் கேலிச் சித்திரங்களை மற்றும் கட்டுரைகளை ஆக்கியுள்ளார்.

இவர் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை பேரவையின் இணைந்து வழங்கும் 2023 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை கடந்த வருடம் பெற்றிருந்தார். கேலிச் சித்திர படைப்புகளுக்காக 4 விருதுகளையும் 2 கலசப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

# சீரற்ற காலநிலையால் 10 பேர் உயிரிழப்பு





இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் நிலவும் சீரற்ற காலநிலையினால் 10 பேர் பலியாகியுள்ளனர்.

25 இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வெள்ளத்தினால், பல விற்பனை நிலையங்கள் மற்றும் வீடுகள் மூழ்கியுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அவுஸ்திரேலியா அருகே தனி நாடான கைலாசாவில் இருக்கிறார் நித்யானந்தா

## உயர் நீதிமன்றத்தில் பெண் சீடர் தகவல்

ஆஸ்திரேலியா அருகேயுள்ள தனி நாடான கைலாசாவில் நித்யானந்தா தங்கியிருக்கிறார் எனவும் கைலாசாவை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துள்ளது என்றும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில், நித்யானந்தாவின் பெண் சீடர் தெரிவித்துள்ளார்.

மதுரை ஆதீன மடத்துக்குள் நுழைய நித்யானந்தாவுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இந்த தடையை விலக்கக் கோரி நித்யானந்தா தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில், "மதுரை ஆதீன மடத்துக்குள் ஒரு பக்தராக நுழைய தடை விதிக்கக்கூடாது. நான் மதுரை ஆதீனம் மடத்துக்குள் நுழைய தடை



விதித்து தனி நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அதற்கு தடை விதிக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, தனி நீதிபதியின் உத்தரவுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், ஏ.டி.மரியா கிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "மனுதாரர் நித்யானந்தா எங்கு உள்ளார்? கைலாசா நாடு எங்குள்ளது? அங்கு எப்படிச் செல்வது, கைலாசா செல்ல கடவுச்சீட்டு, விசா உண்டா?" என்று கேள்வி எழுப்பினர். இதற்கு நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த நித்யானந்தாவின் சீடர் அர்ச்சனா பதிலளிக்கையில்,

"நித்யானந்தா அவுஸ்திரேலியா அருகேயுள்ள யு.எஸ்.கே. (யுனைடெட் ஸ்டேட் ஆஃப் கைலாசா) என்ற தனி நாட்டில் உள்ளார். இந்த நாடு ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாடு. இந்த வழக்கில் புதிய வழக்கறிஞரை நியமிக்க உள்ளோம். அதற்கு அனுமதி வழங்க வேண்டும்" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், வழக்கறிஞரை மாற்ற அனுமதி வழங்கி, விசாரணையை தள்ளிவைத்தனர்.

# ஏர் இந்தியாவின் கறுப்புப் பெட்டி சேதம் அமெரிக்காவுக்கு அனுப்பத் தீர்மானம்

அஹ்மதாபாத் விபத்தில் சேதமடைந்த ஏர் இந்தியா விமானத்தின் கறுப்பு பெட்டியை அமெரிக்காவிற்கு அனுப்ப இந்தியா தீர்மானித்துள்ளது.

விமான விபத்துக்குப் பிறகு ஏற்பட்ட தீ விபத்தில் கறுப்புப் பெட்டி பதிவுக் கருவி வெளிப்புறத்தில் பலத்த சேதமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதன் காரணமாக இந்தியாவில் தரவுகளைப் பிரித்தெடுப்பது சாத்தியமற்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.



சர்வதேச விதிமுறைகளின்படி, விபத்து நடந்த நாட்டின் விசாரணை அமைப்பான விமான விபத்து புலனாய்வுப் பணியகம் இந்த விபத்து குறித்து விசாரிக்க வேண்டும்.

அந்த வகையில், அமெரிக்காவின் வொஷிங்டனைச் சேர்ந்த தேசிய பாதுகாப்பு போக்குவரத்து சபை ஆய்வகத்தின் டிஜிட்டல் விமான தரவுப் பதிவிலிருந்து பெறப்படும் தரவுகள் இந்திய விமான விபத்து புலனாய்வுப் பணியகத்துடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்திய அதிகாரிகளின் மேற்பார்வையில், முறையான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு போக்குவரத்து சபையின் குழு, கறுப்புப் பெட்டியை தங்கள் ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லும் என தெரிவிக்கப்படுகிறது.

# 3 ஆம் உலகப் போர் மூளும் அபாயம்; ரஷ்ய ஜனாதிபதி பகிரங்க எச்சரிக்கை



இஸ்ரேல் – ஈரான் போரால் மூன்றாம் உலகப் போர் மூளும் அபாயம் எழுந்திருக்கிறது.

ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்யா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

சக்திவாய்ந்த அணு குண்டுகளை தயாரிக்க ஈரான் தீவிர முயற்சி செய்து வருவதாக மேற்கத்திய நாடுகள் நீண்ட நாள்களாக குற்றம் சாட்டி வருகின்றன. தற்போது 87 சதவீதம் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் வைத்திருப்பதாகவும் இதை 90 சதவீதம் செறிவூட்டினால் அணு குண்டுகளை தயாரிக்க முடியும் என்றும் சர்வதேச அணு சக்தி நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர்.

இந்த சூழலில் ஈரானின் அணு சக்தி தளங்களை குறிவைத்து இஸ்ரேல் விமானப் படை கடந்த 13 ஆம் திகதி திடீர் தாக்குதலை நடத்தியது. கடந்த 7 நாள்களாக இஸ்ரேல், ஈரான் இடையே தீவிர போர் நடைபெற்று வருகிறது. இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் 20 அணு சக்தி தளங்கள் மிகக் கடுமையாக சேதமடைந்து உள்ளன. மேலும் ஈரானின் 14 அணு சக்தி விஞ்ஞானிகளும் கொல்லப்பட்டு உள்ளனர்.

அணு ஆயுத திட்டத்தை ஈரான் கைவிட்டு,சரண் அடைய வேண்டும் என்று அமெரிக்கா திரைமறைவில் வலியுறுத்தி வருகிறது. ஆனால் சரண் அடையும் பேச்சுக்கே இடமில்லை என்று ஈரான் மதத் தலைவர் அயதுல்லா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா போரில் களமிறங்கினால் மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சூழலில் சர்வதேச அளவில் இஸ்ரேல், ஈரானுக்கு ஆதரவாக பல்வேறு நாடுகள் அணி திரண்டு வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி,கனடா, அவுஸ்திரேலியா உட்பட மேற்கத்திய நாடுகள் அனைத்தும் இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டை பாதியில் ரத்து செய்துவிட்டு அமெரிக்கா திரும்பினார். ஈரான் மீது நேரடியாக போர் தொடுப்பது தொடர்பாக அவர் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நேற்று நிருபர்களிடம் கூறும்போது,

“ஈரான் மீது போர் தொடுக்க விரும்பவில்லை. எனினும் ஈரானின் அணு சக்தி திட்டத்தை அழிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். நான் என்ன செய்வேன் என்பது யாருக்கும் தெரியாது. அடுத்த வாரம் மிகப்பெரிய சம்பவங்கள் நிகழும்.” என்று தெரிவித்தார்.

இது ஈரானுக்கு விடுக்கப்பட்ட நேரடி எச்சரிக்கையாக கருதப்படுகிறது.

புளூம்பர்க் ஊடகம் வெளியிட்ட செய்தியில்,

“அடுத்த சில நாள்களில் ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்கக்கூடும். இதுதொடர்பாக ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார்” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மத்திய கிழக்கில் சன்னி, ஷியா முஸ்லிம்களுக்கு இடையே நேரடி மோதல் நிலவுகிறது. அந்த வகையில் சன்னி முஸ்லிம்கள் அதிகம் வாழும் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேல் விவகாரத்தில் மென்மையான போக்கை பின்பற்றி வருகின்றன.

ஈரானுக்கு ஆதரவாக சீனா, ரஷ்யா, வடகொரியா, வெனிசூலா, ஏமன், லெபனான் உள்ளிட்ட நாடுகள் செயல்படுகின்றன. துருக்கி, அஜர்பைஜான் மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகள் ஈரானுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக பாகிஸ்தான் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்து வருகிறது. ஈரான் மீது இஸ்ரேல் அணு ஆயுத தாக்குதலை நடத்தினால் பாகிஸ்தான் நேரடியாக போரில் களமிறங்கும். இஸ்ரேல் மீது பாகிஸ்தான் இராணுவம் அணு குண்டுகளை வீசும் என்று ஈரான் ராணுவ மூத்த அதிகாரி மோசென் ரீஸி அண்மையில் கூறினார்.

ஆனால் ஈரானின் கருத்தை பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜாமுகமது ஆசீப் உடனடியாக மறுத்தார்.“ஈரானுக்கு நாங்கள் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. அணு சக்தி ஒப்பந்தங்களை நாங்கள் கண்டிப்புடன் பின்பற்றுகிறோம். பாகிஸ்தான் மண்ணையும், மக்களையும் காப்பாற்ற மட்டுமே அணு ஆயுதங்களை வைத்திருக்கிறோம்.” என்று அவர் விளக்கமளித்துள்ளார்.

# இந்தியா – பாகிஸ்தான் போர் நிறுத்தத்தில் அமெரிக்காவுக்கு எந்தப் பங்கும் இல்லை

## முதல்முறையாக ஒப்புக்கொண்டார் ட்ரம்ப்



இந்தியா – பாகிஸ்தான் இடையிலான போர் நிறுத்தத்துக்கு நான்தான் காரணம் என்று தொடர்ந்து கூறிவந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், முதல்முறையாக இரு நாட்டு தலைவர்களே போர் நிறுத்தத்துக்கு காரணம். இதில் அமெரிக்காவுக்கு எந்த பங்கும் இல்லை என்று உறுதிபட தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கருத்தை பிரதமர் மோடி தெரிவித்ததை தொடர்ந்து, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் இராணுவ தளபதி பீல்டு மார்ஷல் அசிம் முனீர், ட்ரம்பை சந்தித்துப் பேசியுள்ளார். வெள்ளை மாளிகையில் அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. இந்த சந்திப்புக்குப் பிறகு ட்ரம்ப் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஈரான், இஸ்ரேல் போர் மற்றும் இந்தியா உடனான போர் நிறுத்தம் குறித்த கேள்விகளுக்கு ட்ரம்ப் பதிலளிக்கையில்,

“பாகிஸ்தான் இராணுவ தளபதிக்கு ஈரான் விவகாரம் பற்றி நன்றாகத் தெரியும். இஸ்ரேல், ஈரான் போர் பற்றி அவர் மகிழ்ச்சியடையவில்லை. பாகிஸ்தான் இஸ்ரேலுக்கு எதிரான நாடு அல்ல. அவர்கள் இரு நாட்டையும் உண்மையில் நன்கு அறிவார்கள்.

எனினும், அவர்கள் ஈரானை நன்கு அறிந்திருக்கலாம். என்ன நடக்கிறது என்பதை அவர்கள் பார்க்கிறார்கள். அவர் (முனிர்) என் கருத்துடன் உடன்படுகிறார். இந்தியா உடனான போரை தொடராமல் பாகிஸ்தான் அதை முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. இதற்காக நன்றி சொல்வதற்காகத்தான் பாகிஸ்தான் இராணுவ தளபதி அசிம் முனிர் உடனான சந்திப்பு தற்போது நடந்துள்ளது.

போர்நிறுத்தம் ஏற்படாவிட்டால், அது ஒரு அணுசக்தி போராக இருந்திருக்கலாம். இரண்டு நாடுகளும் பெரிய அணுசக்திகள். ஆனாலும் போரை நிறுத்த அவர்கள் முடிவு செய்தார்கள். இரண்டு புத்திசாலிகள் போரை தொடர வேண்டாம் என முடிவு செய்தார்கள். அதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள நாங்கள் பணியாற்றி வருகிறோம்.” என்றார்.

பக்கங்கள் - 03


கனடா முரசு

வெள்ளிக்கிழமை 20/06/2025

## கனடாவின் சில பகுதிகளில் கன மழை பெய்யும் சாத்தியம்



C2▶



### நீங்கள் தலை சிறந்தவர்:

# கனடாவில் மோடிக்கு கிடைத்த பாராட்டுகள்

ஜி7 மாநாட்டில் கலந்துகொள்ள கனடா சென்ற இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டுகள் குவிகின்றன.

ஜி7 மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியபிரதமர்நரேந்திரமோடிக்கு கடைசி நேரத்தில்தான் அழைப்பு வந்தது.

ஆனாலும் அவர் அதை ஏற்றுக் கொண்டு கனடா சென்றார். அவர் சென்றது பலவகையிலும் நன்மையாகவே முடிந்துள்ளது.

கனடா இந்திய உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன், எதிர்பாராத நாடுகளின் தலைவர்களிடமிருந்தும் மோடிக்கு பாராட்டு கிடைத்துள்ளது.

C2▶




# கனடாவில் 4.8 மில்லியன் புதிய வீடுகள் தேவை

கனடாவில் எதிர்வரும் 10 ஆண்டுகளில் மொத்தம் 4.8 மில்லியன் புதிய வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஷகனடாவின் வீட்டு வசதி மற்றும் வீட்டு மனை கூட்டுத்தாபனம் வெளியிட்ட புதிய அறிக்கையின் பிரகாரம் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது 2019ஆம் ஆண்டு காணப்பட்ட வீட்டு வசதி நிலையை மீட்டெடுக்க இவ்வாறு 4.8 மில்லியன் வீடுகள் தேவையென குறிப்பிடப்பட்டுள்ளது.

C2▶



# கனடாவின் சில பகுதிகளில் கன மழை பெய்யும் சாத்தியம்

கனடாவின் சில பகுதிகளில் கன மழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாறியோ மற்றும் க்யூபெக் மாகாணங்களில் வியாழக்கிழமை முழுவதும் கனமழை எச்சரிக்கை தொடருகிறது. சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும் எதிர்பார்க்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

டொரொண்டோவின் வடபகுதி மற்றும் ஓட்டாவா புறநகர் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் மழை எச்சரிக்கை அமுலிலுள்ளது.

பேரி சவுண்ட், ரோஸோ, கில்பியர் மாகாண பூங்கா ஆகிய பகுதிகளில் 40 முதல் 60 மில்லிமீற்றர் வரையான மழை பெய்யக்கூடும் என்றும், இது மதியம் வரை தொடரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையும் இருக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் கனமழை காரணமாக வீதிகளில் தண்ணீர் தேங்கியோ அல்லது திடீர் வெள்ளமாக மாற்றமடையவோ சாத்தியம் உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

மழை நேரத்தில் வாகனங்களை அவதானமாக செலுத்த வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# இந்திய மாணவி மர்ம மரணம்

கனடாவில் உயர்கல்வி படித்து வந்த இந்திய மாணவி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். அவரது சடலத்தை தாயகம் கொண்டு வருவதற்கான அனைத்து உதவிகளையும் செய்ய தயார் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

டில்லியைச் சேர்ந்தவர் தன்யா தியாகி என்பவர் கனடாவில் உள்ள கார்கேரி பல்கலையில் உயர்கல்வி படித்து வந்தார். இவர் கடந்த ஜுன் 17 ஆம் திகதி மர்மமான முறையில் உயிரிழந்தார். ஆனால், இவரது மரணத்திற்கான காரணம் என்ன என்று இதுவரையில் தெரியவில்லை.



அதேவேளையில், எக்ஸ் தளத்தில் வழக்கறிஞர் ஒருவர் பிரதமர் அலுவலகத்தை "டேக்" செய்து ஒரு பதிவு ஒன்றை போட்டுள்ளார். அந்தப் பதிவில், வடகிழக்கு டில்லியில் உள்ள விஜய் பார்க் பகுதியைச் சேர்ந்தவர் தன்யா தியாகி. இவர் கனடாவில் படித்து வந்தார். இவர் கடந்த 17 ஆம் திகதி மாரடைப்பால் உயிரிழந்தார். தன்யாவின் உடலை இந்தியா கொண்டு வர பிரதமர் மோடி உதவ வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து கனடாவுக்கான இந்திய தூதரகம் குறிப்பிடுகையில்,

"கால்கேரி பல்கலையில் பயின்று வந்த இந்திய மாணவி தன்யா தியாகியின் திடீர் மறைவு வருத்தமளிக்கிறது. அவரது குடும்பத்திற்கு தேவையான உதவிகளை செய்து கொடுக்கும் விதமாக, கனடா அதிகாரிகளுடனும், குடும்பத்தினருடன் தூதரக அதிகாரிகள் தொடர்பில் இருந்து வருகின்றனர்," என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கனடாவில் 4.8 மில்லியன்..**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த வீடுகள் ஆண்டுக்கு 4.3 லட்சம் முதல் 4.8 லட்சம் வரை கட்டப்பட வேண்டியிருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இது தற்போதைய வீட்டு நிர்மாண வேகத்தை இரட்டிப்பாக்கும் அளவிலான தேவை என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

2025 மே மாதம் வரை 90,760 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன என பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கனடாவில் மோடிக்கு...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஜி 7 மாநாட்டில் இந்திய பிரதமர் மோடியை சந்தித்த இத்தாலி பிரதமரான ஜார்ஜியா மெலோனி, நீங்கள் தலைசிறந்தவர், உங்களைப்போல ஆக நானும் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன் என்று கூறும் காட்சி இணையத்தில் வைரலாகியுள்ளது.

அத்துடன், ட்ரூடோ ஆட்சியின்போது இந்தியாவை அவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்க, தற்போதைய கனேடிய பிரதமரான மார்க் கார்னியோ, இந்திய பிரதமர் மோடியை புகழ்ந்து பேசியுள்ளார்.

பிரதமர் மோடியின் வருகை, இந்தியப் பொருளாதாரத்தின் அளவு, செயலூக்கம் மற்றும் தொழில்நுட்ப வலிமையையும், உலகளவில் அதன் தலைமைப் பங்கையும் பிரதிபலிக்கிறது." என்று மார்க் கார்னி கூறியுள்ளார்.



# ஒண்டேரியோ முதல்வரின் காரை திருட முயற்சித்த 4 பேர் கைது

கனடாவின் ஒண்டேரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்டின் எட்டோபிக்கோ வீட்டின் முன்புறம் நிறுத்தப்பட்டிருந்த காரை திருட முயற்சித்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காரை திருட முயற்சித்தவர்கள் குறித்து அவர் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

“நால்வர், முகமூடிகள் அணிந்து, தெருவில் வேகமாக வந்து என் டிரைவ் வேயில் இருந்த காரை எடுத்து செல்ல வந்தார்கள்,” என ஃபோர்ட் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் குற்றவியல் நீதித் துறையை முதல்வர் கடுமையாக விமர்சித்தார். குறித்த நபர்களை முட்டாள் குற்றவாளிகள் என அவர் விவரித்துள்ளார்.

ஒன்றாரியோ மாகாண பொலிஸாரின் பாதுகாப்புப் பிரிவு அவர்களை கைது செய்ததாக அவர் தெரிவித்தார்.

அந்த வாகனம் ஒரு டிரைவ்வேயை அணுகும் போது பொலிஸார் அதை நிறுத்தி விசாரித்தனர்.

இதில் ஒருவர் ஓடி தப்ப முயற்சித்ததாகவும், அருகே அவரை பிடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான நான்கு பேரில் இரண்டு பேர் 17 மற்றும் 16 வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்கள் மோட்டார் வாகனங்களை திருட பயன்படுத்தப்படும் மின்னணு சாதனங்களை வைத்திருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் குற்றவாளிகள் உரிய முறையில் தண்டிக்கப்படுவதில்லை எனவும் ஒண்டேரியோ முதல்வர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கனடாவுக்கான புதிய இந்தியத் தூதராக தினேஷ் பட்நாயக் நியமிக்கப்படலாம்

கனடாவுக்கான புதிய இந்திய தூதராக தினேஷ் கே.பட்நாயக் நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

1990 ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுப் பணி அதிகாரியான இவர், தற்போது ஸ்பெயினுக்கான இந்தியா தூதராக உள்ளார்.

இந்தியா – கனடா இடையிலான உறவில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க இரு நாடுகளின் பிரதமர்களும் ஒப்புக் கொண்ட நிலையில், தூதரை நியமிப்பதற்கான நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது.

கனடாவில் கடந்த 2023 ஆம் ஆண்டில் காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்திய அரசுக்கு தொடர்பிருப்பதாக அப்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பரபரப்பு குற்றஞ்சாட்டினார்.



நிஜ்ஜார் கொலையில் விசாரிக்கப்பட வேண்டிய நபராக, கனடாவுக்கான இந்திய தூதராக இருந்த சஞ்சய் வர்மா அறிவிக்கப்பட்ட நிலையில், அவர் உள்பட 6 தூதரக உயரதிகாரிகளை கடந்த ஆண்டு திரும்ப அழைத்த இந்தியா, கனடா தூதர் உள்ளிட்ட உயரதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற உத்தரவிட்டது. இதனால், இருதரப்பு உறவு முன்னெப்போதும் இல்லாத அளவில் பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்தச் சூழலில், ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதைத் தொடர்ந்து, பொருளாதார வல்லுநரான மார்க் கார்னி கனடா பிரதமராக கடந்த மார்ச் மாதம் பதவியேற்றார்.

இந்நிலையில், கனடாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி, மாநாட்டுக்குப் பிறகு மார்க் கார்னியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது, தூதர்களை மீண்டும் நியமிப்பதில் தொடங்கி, இருதரப்பு உறவில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இரு நாடுகள் தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், கனடாவுக்கான புதிய இந்திய தூதரை நியமிப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.